بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 28/10/2022 அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 35 அன்னாரது வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் புகழத்தக்க பண்புகள் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

பத்ர் சஹாபா பற்றிய நற்குறிப்பில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அன்னாரது நற்குணங்கள் பற்றி எடுத்துக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு என்ன அந்தஸ்த்தை அளித்து வந்தார்கள் என்பது தொடர்பாக சில அறிவிப்புகள் உள்ளன.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்த காலகட்டத்தில் தினமும் ஓரிருமுறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இல்லத்திற்கு சென்று வந்தார்கள் என்ற நற்பேறும் சிறப்பும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு உள்ளது.

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர்களை ஸாத்துஸ் ஸலாஸில் படைக்குப் படைத்தளபதியாக நியமித்து அனுப்பினார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

“நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, ‘மக்களில் தங்களுக்கு அதிகம் பிடித்தவர் யார்?’ என்று கேட்டேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ‘ஆயிஷா’ என்று கூறினார்கள். நான், ‘ஆண்களில் யார்?’ என்று கேட்டேன். அன்னார், ‘அவர்களின் தந்தையார்’ என்று கூறினார்கள். நான், பிறகு யார்? என்று கேட்டேன். அன்னார், ‘உமர் பின் கத்தாப்’ என்று கூறினார்கள். பிறகு, இவ்வாறே அன்னார் சில ஆண்களின் பெயர்களைக் கூறினார்கள்.”

ஹஸ்ரத் சலமா பின் அக்வா அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘ஒரு நபி தோன்றினாலே அன்றி, அபூபக்ர் எல்லாரை விடவும் சிறந்தவரும் மேலானவரும் ஆவார்.’

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

‘எனது உம்மத்தைச் சேர்ந்தவர்களில், எனது உம்மத் மீது எல்லாரை விடவும் அதிகம் கருணையும் பரிவும் காட்டியவர் அபூபக்ர் ஆவார்.’

ஹஸ்ரத் அபூ ஸயீத் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘உயர்வான தரத்தில் இருப்பவர்களை அவர்களைக் காட்டிலும் குறைந்த தரத்தில் இருப்பவர்கள், நீங்கள் உதிக்கும் நட்சத்திரத்தை விண்ணின் ஓரத்தில் விண்ணை நோக்கி காண்பது போன்று காண்பார்கள். மேலும், அபூபக்ரும் உமரும் அவர்களைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.’

அதாவது, அவர்கள் உயர்ந்தவர்கள் ஆவார்கள். உயர இருக்கும் நட்சத்திரத்தைப் பார்ப்பது போன்று மக்கள் அவர்கள் இருவரையும் காண்பார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘அவர்கள் இருவரும் எவ்வளவு சிறந்தவர்கள்!’

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘அபூபக்ரைத் தவிர, நாம் திருப்பி கைமாறு செய்து விடாத எவருடைய பேருதவியும் நம்மீது கிடையாது. அவர் நமக்குப் பேருதவி புரிந்திருக்கிறார். மேலும், அவருக்கு அதற்கான பிரதிபலனை கியாமத் நாளன்று அல்லாஹ் வழங்குவான்.’

கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் தமது இறுதி நோயின் போது கூறினார்கள்: ‘மக்களில் அபூபக்ர் பின் அபூ கஹாஃபாவை விட அதிகம், தனது உயிர் மற்றும் செல்வத்தைக் கொண்டு என்னுடன் நல்ல முறையில நடந்து கொண்டவர் எவருமில்லை. நான் மக்களில் எவரையாவது ‘கலீல்’ (எனப்படும் நெருங்கிய தோழராக) ஆக்கிக் கொண்டிருந்தால், நிச்சயமாக அபூபக்ரைத் தான் கலீலாக ஆக்கிக் கொண்டு இருந்திருப்பேன். ஆனால், இஸ்லாத்தின் தோழமை எல்லாவற்றையும் விட சிறந்தது. இந்தப் பள்ளியில் அபூபக்ரின் ஜன்னலைத் தவிர மற்ற எல்லா ஜன்னல்களையும் என் புறமிருந்து அடைத்து விடுங்கள்.’

கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘அபூபக்ர் என்னைச் சேர்ந்தவர்; நான் அவரைச் சேர்ந்தவன். அபூபக்ர் இம்மையிலும் மறுமையிலும் என்னுடைய சகோதரர் ஆவார்.’

ஸுனன் திர்மிஸி உடைய அறிவிப்பு இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிக் கூறினார்கள்:

‘சொர்க்கவாசிகளில், முன்னவர்கள் மற்றும் பின்னவர்களில், பெரிய வயதுடைய மக்களில், நபிமார்கள் மற்றும் இறைதூதர்கள் தவிர, மற்ற அனைவருக்கும் இவர்கள் இருவரும் தலைவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

‘ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளைச் சேர்ந்த தமது சஹாபாவிடம் வெளியே வருகை தந்து அமர்வார்கள். அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இருப்பார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)

அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆகிய இருவரைத் தவிர வேறு எவரும் தமது பார்வை உயர்த்தி அன்னாரைப் பார்க்க மாட்டார்கள். அவர்கள் இருவரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்ப்பார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்கள் இருவரையும் பார்ப்பார்கள். அவர்கள் இருவரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்து புன் சிரிப்பார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவ்விருவரையும் பார்த்து புன் சிரிப்பார்கள்.'

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: 'நீர்! சொர்க்கத்தின் நீர் சுனையில் என்னுடைய தோழர் ஆவீர். மேலும், குகையில் என்னுடைய தோழர் ஆவீர்.'

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ஒரு நாள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வெளியே வருகை தந்தார்கள்; பள்ளிக்குள் நுழைந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆகிய இருவரில் ஒருவர் அன்னாருக்கு வலப்புறமும், இன்னொருவர் இடப்புறமும் இருந்தார்கள். அன்னார் அவ்விருவரின் கைகளையும் பிடித்திருந்தவாறு, 'இவ்வாறே நாங்கள் கியாமத் நாளன்று எழுப்பப்படுவோம்' என்று கூறினார்கள்."

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹன்தப் அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆகிய இருவரையும் பார்த்துக் கூறினார்கள்: 'இவர்கள் இருவரும் கண்களும் காதுகளும் ஆவார்கள்.' அதாவது, எனது நெருங்கிய தோழர்களைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் அபூ ஸயீது குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஒவ்வொரு நபிக்கும் விண்ணவர்களில் இரு அமைச்சர்களும் மண்ணவர்களில் இரு அமைச்சர்களும் இருப்பார்கள். விண்ணவர்களில் எனது இரு அமைச்சர்கள் ஜிப்ரீல் மற்றும் மீகாயீல் ஆவார்கள். மண்ணவர்களில் எனது இரு அமைச்சர்கள் அபூபக்ர் மற்றும் உமர் ஆவார்கள்.' பிறகு, அவர்களுக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியையும் கூறினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது மலை மீது ஏறினார்கள். அன்னாருடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆகியோரும் இருந்தார்கள். அப்போது அது அசைய ஆரம்பித்தது. அன்னார் கூறினார்கள்:

'உஹது மலையே! அசையாது இருப்பாயாக!' (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதன் மீது தமது பாதத்தையும் அடித்தார்கள் என்று நான்

நினைக்கிறேன்.) ஏனெனில், உன் மீது ஒரு நபியும் ஒரு சித்தீக்கும் இரண்டு ஷஹீதுகளும் மட்டுமே உள்ளார்கள்.'

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

''ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருமுறை ஒரு சபையில் சொர்க்கத்தைப் பற்றியும் அதன் அருட்கொடைகளைப் பற்றியும் கூறினார்கள். இதைக் கேட்டதும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! சொர்க்கத்தில் நானும் தங்களுடன் இருக்க வேண்டும் என்று துஆ செய்யுங்கள்' என பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'நீர் என்னுடன் இருப்பீர் என்று நான் நம்புகிறேன்; துஆவும் செய்கிறேன்' என்று கூறினார்கள்.

அங்கிருந்த இன்னும் சில சஹாபாவில் ஒரு சஹாபி, 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கும் தங்களுடன் இருக்கும் நற்பேறு கிடைப்பதற்காக எனக்காகவும் துஆ செய்யுங்கள்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் உம்மீதும் அருள் புரிவானாக! ஆனால், எவர் முதலில் கூறினாரோ அவரோ இப்போது துஆவைப் பெற்றுக் கொண்டார்' என்று கூறினார்கள்.''

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்:- ''ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'எவர் இன்ன இபாதத்தில் அதிகம் பங்கு கொள்வாரோ அவர் சொர்க்கத்தில் இன்ன கதவு வழியாக அழைத்துச் செல்லப்படுவார். எவர் இன்ன இபாதத்தில் அதிகம் பங்கு கொள்வாரோ அவர் இன்ன கதவு வழியாக அழைத்துச் செல்லப்படுவார்.'

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பல்வேறு நற்செயல்களைப் பற்றி குறிப்பிட்டு இவ்வாறு கூறினார்கள்: 'பல்வேறு நற்செயல்களில் அழுத்தம் கொடுக்கக்கூடியவர்கள் சொர்க்கத்தின் ஏழு கதவுகள் வழியாக அழைத்துச் செல்லப்படுவார்கள்.'

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஒருவர் எல்லா நற்செயல்களிலும் அழுத்தம் கொடுத்தால், அவருடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படும்?' என்று பணிவுடன் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அவர் சொர்க்கத்தின் ஏழு கதவுகள் வழியாகவும் அழைத்துச் செல்லப்படுவார். மேலும், அபூபக்ரே! நீரும் அவர்களைச் சேர்ந்தவராக இருப்பீர் என்று நான் நம்புகிறேன்' என்று கூறினார்கள்.''

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றி நற்குறிப்பு இனி வருங்காலங்களில் தொடரும் என்று கூறிய பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பதாகக் குறிப்பிட்டவாறு கூறினார்கள்: இப்போது நான் சில மர்ஹூம்களைப் பற்றி கூறுவேன்.

**1. இந்தோனேஷியாவின் அமீர் மதிப்பிற்குரிய அப்துல் பாஸித் சாஹிப் அவர்கள்.** இவர்கள் அக்டோபர் 8 ஆம் தேதி 71 ஆவது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رٰجِعُوۡنَ

இவர்கள் மவ்லவி அப்துல் வாஹித் சமாட்டரீ சாஹிப் அவர்களின் மகனாவார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவில் ஷாஹித் தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள். இதற்குப் பிறகு தமது நாட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டார்கள். இவர்கள் முபல்லிஃக் ஆகத் தாய்லாந்தில் பணியமர்த்தப்பட்டார்கள். தாய்லாந்தில் தொண்டாற்றிய பிறகு, இந்தோனேஷியாவுக்குத் திரும்பி வந்து விட்டார்கள். இறுதி மூச்சு வரை இந்தோனேஷியாவிலேயே பணியில் மூழ்கியிருந்தார்கள்.

ஒரு நீண்ட காலம் இந்தோனேஷியா அமீராகப் பணியாற்றுவதற்கு நல்வாய்ப்பு பெற்றார்கள். இவர்களின் தொண்டு காலம் 40 ஆண்டுகள் ஆகிறது. பின்விட்டுச் சென்றவர்களில், துணைவியார் மட்டுமின்றி, மூன்று மகன்களும் இரண்டு மகள்களும் இருக்கிறார்கள். மர்ஹூம் மிக அதிகமாக இயக்கத்தின் மீது வேதனை கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு விஷயத்தைக் காட்டிலும் ஜமாஅத்திற்கு முன்னுரிமை அளித்து வந்தார்கள்.

முரப்பிமார்களுக்கு மிகவும் கண்ணியம் அளிப்பார்கள். மிகவும் கௌரவமான அதே வேளையில் பணிவுடன் செயல்படுபவராக இருந்தார்கள். ஜமாஅத் அமைப்புக்கும் கிலாஃபத்துக்கும் மிகவும் கண்ணியம் அளிப்பார்கள். ஜமாஅத் உடைய செல்வங்களை மிகவும் அதிகமாகக் கருத்திற் கொள்வார்கள். இவர்கள் இந்தோனேஷியா ஜமாஅத்திற்கு ஆன்மீக தந்தையாக இருந்தார்கள். இவர்கள் தண்டனை அளித்தாலும், சீர்திருத்த அம்சத்தை கருத்திற் கொண்டிருப்பார்கள். கடந்த ஒரு வருடமாக நோயுற்றிருந்தார்கள். ஆனால், நோய்வாய்ப்பட்டிருந்த நாள்களிலும் தமது கடமைகளில் குறை ஏற்பட விடவில்லை.'

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விளக்கமாக மர்ஹூம் அவர்கள் இயக்கத்துக்கு ஆற்றிய தொண்டுகள் மற்றும் அவர்களது புகழத்தக்க பண்புகளை எடுத்துரைத்த வண்ணம் இவ்வாறு துஆ செய்தார்கள்:

அல்லாஹ் மர்ஹூம் அவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்குவானாக! இவர்களைப் போன்ற தொண்டர்களை எப்போதும் கிலாஃபத்துக்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக!

2. தன்ஸானியாவின் இயக்கத்தின் முரப்பி யூஸுஃப் உஸ்மான் கம்பாலா சாஹிப் அவர்களின் துணைவியார் **மதிப்பிற்குரிய ஸைனப் ரமஸான் ஸைஃப் சாஹிபா** அவர்களுடையது. இவர்கள் கடந்த நாள்களில் 70 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رٰجِعُوۡنَ

3. காதியானின் தர்வேஷ் ஷேக் அப்துல் கதீர் சாஹிப் அவர்களின் துணைவியார் **மதிப்பிற்குரிய ஹலீமா பேகம் சாஹிபா** அவர்கள். இவர்கள் கடந்த மாதம் வஃபாத் ஆகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رٰجِعُوۡنَ

மர்ஹூமா தொழுகையையும் நோன்பை முறையாக கடைபிடிக்கக் கூடியவராகவும் பொறுமைசாலியாகவும் நன்றி செலுத்தக்கூடியவராகவும் நெருங்கிப் பழகக்கூடியவராகவும் நல்லொழுக்கமுள்ள பெண்மணியாகவும் இருந்தார்கள். உடல்நிலை இடமளித்த வரை காதியானின் பிள்ளைகளுக்குத் திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்து வந்தார்கள். கிலாஃபத் உடன் மிகவும் அன்பு இருந்தது. காலத்தின் கலீஃபா அவர்கள் தரப்பிலிருந்து அறிவிக்கப்படும் ஒவ்வொரு திட்டத்திற்கும் செவிசாய்த்து வந்தார்கள்.

தர்வேஷிய காலத்தை இவர்கள் மிகவும் பொறுமையுடனும் நன்றியுடனும் கழித்தார்கள். மர்ஹூமா மூஸீயாவாக இருந்தார்கள். இவர்களின் மகன் ஷேக் நாஸிர் வஹீத் சாஹிப் அவர்கள் காதியான் நூர் மருத்துவமனையின் பொறுப்பு நிர்வாகியாகத் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பும் பெறுகிறார்கள். இவர்களுக்கு மூன்று மகள்கள் இருக்கிறார்கள். மூவரும் வெளிநாட்டில் இருக்கிறார்கள். அல்லாஹ் மர்ஹூமா அவர்களுடன் கருணையுடன் நடந்து அவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்குவானாக!

4. **மதிப்பிற்குரிய மேலே அனீஸா எபீஸா சாஹிபா அவர்கள்.** இவர்கள் கடந்த நாள்களில் 71 வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

மர்ஹூமா கரீபாஸ் ஜமாஅத்தின் முதல் முஸ்லிமும் முதல் அஹ்மதியும் ஆவார்கள். எப்படியோ திருக்குர்ஆனின் ஒரு மொழியாக்கப் பிரதி இங்கு வந்தடைந்து விட்டது. அதைப் படித்து அவர்கள் தாமே ஈமான் கொண்டார்கள். பர்தாவும் அணிய ஆரம்பித்து விட்டார்கள்.

மர்ஹூமா மிகவும் நல்லவராகவும், வீரமிக்கவராகவும், தன்மான உணர்வு கொண்டவராகவும் கம்பீரமான அஹ்மதியாகவும் இருந்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மர்ஹூம்கள் அனைவரின் பாவமன்னிப்புக்காகவும் உயர்ப்படித்தரத்திற்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ

اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ

اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ

وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**